1972 மார்ச் 9]

உழவர்களுக்கு விசையேற்றங்கள்

* 395 வினா—திரு. க. நாகராஜன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலம் விசையேற்றங்களை விவசாயிகள் கடனுக்கு வாங்கும்போது, அவைகளை நிறுவுவதற்கான ஒப்பந்த விலை பட்டியல்களை (Quotations) கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் மட்டும் தான் பெறவேண்டும் என்று அரசு வற்புறுத்தும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. க. நாகராஜன் : விவசாயிகளுக்கு நிலவள வங்கிகள் பம்பு செட்டுகளுக்காகக் கடன் வழங்குகின்றபோது நிலவள வங்கித் தலைவர், செயலாளர் இவர்கள் எல்லாம் விவசாயிகளை குறிப்பிட்ட விற்பனையாளர்களிடம் சென்று பம்புசெட்டுகள் வாங்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். இதனால் பல தவறுகள் ஏற்படுகின்றன. இதைத் தடுத்து ஒரு கூட்டுறவு அமைப்பு மற்றொரு கூட்டுறவு அமைப்புக்கு உதவி செய்யக்கூடிய வகையில் வாய்ப்பு உண்டு என்பதால், அதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர் கூறியது போல் சுற்றறிக்கை விடப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையில் பம்புசெட்டுகள் பெறும்படி ஆலோசனை சொல்லப் பட்டிருக்கிறது. கட்டாயம் எதுவும் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, கூட்டுறவு நிலவள வங்கி கொடுக்கும் கடனைக் கொண்டு பம்பு செட்டுகள் வேண்டிய சாமன்கள் வாங்கும்பொழுது கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் மார்க்கெட்டிங் சொசைடிகளில்தான் வாங்க வேண்டு மென்று உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கனம் உறுப்பினர் அவர்கள் கூறியது போல் கமிஷன் அடிப்படையிலே சிலர் செயல்படுகிறார்கள். எனவே கூட்டுறவுத் துறையின் மூலம் இயங்கும் மார்க்கெட்டிங் சொசைடிகளிலே அவர்கள் வாங்க வேண்டுமென்ற முறையிலே—

ஏனென்றால் கூட்டுறவிலேதான் லாபம் குறைந்த சதவீதத்தில் இருக்கிறது—கட்டாயமாகச் செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா விடுதிகள்

* 396 **வினா.—திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம், 15-ம் தேதி முதல் தமிழ்நாட்டில் மாநில அரசு சுற்றுலா விடுதிகளின் அறை களுக்கு வாடகை 50 சதவிகிதம் உயர்த்தியுள்ளதா ?

(இ) ஆம் எனில், சட்டசபை அங்கத்தினர்கள் வாடகை இல்லாமல் தங்குவதற்கு உத்தரவளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, சுற்றுலா மாளி கைக்கு 25 சதவிகிதத்துக்கும் அதிகமாக வாடகை வாங்கு கிறார்கள். சட்டசபை உறுப்பினர்களுக்கு வாடகையில்லாமல் தங்குவதற்கு அனுமதியளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, 25 சதவிகிதம் அல்ல 50 சதவிகிதம் வாடகை தரப்படுகிறது. சட்ட சபை உறுப்பினர்கள் இலவசமாகத் தங்குவதற்கு ஏற்பாடு செய்யும் செயற் குறிப்பு இப்பொழுது இருக்கிறதா என்று கேட்டார்கள். அதுபற்றி சுற்றுலா வாரியம்தான் முயற்சி செய்ய வேண்டும். இப்பொழுது அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

திரு. என். கணபதி : தலைவர் அவர்களே, சாதாரணமாக டூரிஸ்ட் பங்களாவிலே போய்த் தங்குவதற்கு வரிசை வாரியாக அதாவது ஆர்டர் ஆப் பிரையாரிடி வைத்திருப்பதில் சட்டசபை மேலவை உறுப்பினர்களுக்கு ஆறாவது இடம்தான் இருக்கிறது.